

தென்காசி நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து மேலகரம் பேரூராட்சி தெப்பக்குளம்,எழில்நகர் ஆகிய பகுதியில் தலா ரூபாய் 4.30 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட உயர் கோபுர மின்விளக்கை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், கலை கதிரவன் எம்.எல்.ஏ.ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். உடன் மேலகரம் பேரூராட்சி துணை செயலாளரும்,பேரூராட்சி மன்ற துணை தலைவருமான ஜீவானந்தம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தூத்துக்குடி மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அனிதா இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தூத்துக்குடி, ஜுன் 18-

மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 20.06. 2026 அன்று மாலை 6 மணிக்கு ஆத்தூர் பேருந்து நிலையம் அருகில் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.



தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒருபகுதியாக நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு ஆழ்வை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.பி. சதீஷ்குமார் தலைமை ஏற்கிறார். மத்திய ஒன்றியச் செயலாளர் ஏ.நவீன்குமார் மாவட்ட அணி அமைப்பாளர்கள்ஆ. ராமஜெயம் ச.ஜனகர் பேரூராட்சி மன்றத் தலைவர் யு.மு.கமாலுதீன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஆத்தூர் பேரூர் கழக செயலாளர் எம்.பி. முருகானந்தம் வரவேற்புரையாற்றுகிறார்.

அனிதா சு. ராதாகிருஷ்ணன் ஆடுயு தி.மு.க செய்தித்தொடர்பு துணைத் தலைவர் மருது அழகுராஜ் தலைமை செயற்குழு உறுப்பினர் பு.ஏ. மார்க்கண்டேயன் ஆடுயு தலைமைக் கழக பேச்சாளர் சரத்பாலா ஆகியோர்

சிறப்புரையாற்றுகின்றனர். மேலும் தலைமைக் கழக பேச்சாளர்கள் மாநில, மாவட்ட நிர்வாகிகள் உரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் பேரூராட்சி பகுதியிலுள்ள அரசுப் பள்ளியில் 10வது, 12வது பொதுத் தேர்வில் முதல் இரண்டு இடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படும். விளிம்பு நிலையில் உள்ள பெண்களுக்கு தையல் இயந்திரம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்கப்படும். அதேபோல் மூத்த கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் நிர்வாகிகள் மக்;கள் பிரதிநிதிகள் கிளை வார்டு வட்ட செயலாளர்கள் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### வே.ஜெயபாலன்-பொ.சிவபத்மநாதன்- கலை கதிரவன் எம்.எல்.ஏ.முன்னிலை!

# ஊத்துமலையில் தென்காசி சட்டமன்ற கிளை அலுவலகம் துவக்க விழா!

## கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை தலைமை! திவ்யா மணிகண்டன் துவக்கி வைத்தார்!

தென்காசி, ஜுன் 18-

தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஊத்துமலையில் சட்டமன்ற கிளை அலுவலக துவக்க விழா நிகழ்வு

கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

சட்டமன்ற கிளை அலுவலகத்தை ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவரும், நெல்லை மேற்கு மாவட்ட மகளிரணி செயலாளருமான திவ்யா மணிகண்டன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் 14062026 அன்று செய்தியாளர்களிடம் பேட்டியின் போது ஊத்துமலை,சுரண்டை,பாவூர்சத்திரம் ஆகிய பகுதிகளில் சட்டமன்ற கிளை அலுவலகம் திறக்கப்படும் என்று கூறினார்.

அதன்படி தென்காசி தொகுதிக்கு உட்பட்ட ஊத்துமலையில் சட்டமன்ற கிளை அலுவலக துவக்க விழா நிகழ்வு

கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்ம நாதன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவரும், நெல்லை மேற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளரு மான திவ்யா மணிகண்டன் பங்கேற்று சட்டமன்ற கிளை அலுவலகத்தை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் இராஜேஸ்வரன்,ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், சேக்முகமது,முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அமைப்பாளர் அண்ணாமலை,ஒன்றிய குழு உறுப்பினர்கள் பால்துரை, வள்ளியம்மாள்,முருகேசன், துணைத் தலைவர் ராஜாமணி, கவுன்சிலர் அந்தோணிசாமி,ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார்,ஊத்துமலை செயலாளர் ராமச்சந்திரன்,தங்கம்,ராஜா, முருகையா, லட்சுமணன்,அரிராம் சேட்,

இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.கருப்புசாமி கோட்டையப்பன் ஏற்பாடு! நெல்லை மாநகர இளைஞரணி சார்பில்

# கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா-100 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை!

## என்.மாலை ராஜா முன்னிலை! நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.பங்கேற்பு !

நெல்லை. ஜுன் 18-

நெல்லை மாநகர இளைஞரணி சார்பில் மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.கே.கருப்பசாமி கோட்டையப்பன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு 100 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு பாளை என்.ஜி.ஓ.காலனி ஆர்சி சர்ச் அருகில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலை ராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் பங்கேற்று ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ், மேலப்பாளையம் பகுதி பொறுப்பாளர்5 துபாய் சாகுல்,சாமுவேல், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனித்தா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன், மிக்கேல்,குரு ஜெசி,வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் அஜிஸ், வட்டச் செயலாளர்கள் வினோத்குமார், பாலா, இம்மானு வேல்,முப்படாதி,பெருமாள், மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை மாநகர இளைஞரணி அமைப்பாளர், மாமன்ற உறுப்பினர் கே. கே.கருப்பசாமி கோட்டையப்பன் செய்திருந்தார்.



நெல்லை மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.கே.கருப்பசாமி கோட்டையப்பன் ஏற்பாட்டில் 100 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர்,பாளை மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.பங்கேற்று சீருடைகளை வழங்கினார்.உடன் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என.மாலை ராஜா,மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மேலப்பாளையம் பகுதி பொறுப்பாளர் துபாய் சாகுல் ஆகியோர் உள்ளனர்.





முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு அரியலூர் மாவட்ட கழக இளைஞரணி சார்பில், லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையம் கே.ஆர்.வி. நடுநிலை பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், அரியலூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் தெய்வ.இளையராஜா ஏற்பாட்டில் மதிய அறுசுவை உணவை அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் நகர கழக செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### புதுச்சேரி தேர்தலில் “ஃபிரண்ட்லி ஃபைட்”

# யார் ஆடியது என்று புதுச்சேரி மக்களுக்குத் தெரியும்!

## வைத்திலிங்கம் பேச்சுக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா பதிலடி !

புதுவை, ஜுன் 18-

புதுச்சேரி மாநில தி.மு.க.அமைப் பாளர் இரா.சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:

புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் அவர்கள் இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ள கருத்துக்கள் அரசியல் உண்மைகளுக்கு முற்றிலும் முரணானவை. கூட்டணியின் தோல்விக் கான காரணங்களை சுய பரிசோதனை செய்யாமல், அதன் முழுப் பொறுப்பையும் திமுக மீது சுமத்த முயற்சிப்பது அரசியல் நேர்மைக்கு உகந்ததல்ல.



புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பே, திமுகவிற்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருப்பதால் கூட்டணிக்கு திமுக தலைமை தாங்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்தின. இருந்தபோதிலும், காங்கிரஸ் கட்சி தனது தலைமையில் கூட்டணி செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தியது.

கூட்டணி ஒற்றுமையை முன்னிறுத்திய திமுக, தனது அரசியல் வலிமை மற்றும் வளர்ச்சியைப் பொருட்படுத்தாமல் காங்கிரஸ் தலைமையை ஏற்றுக் கொண்டது. கடந்த தேர்தலில் போட்டியிட்ட அதே 13 தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்த போதிலும், காங்கிரஸ் தலைமையின் வற்புறுத்தலால் மண்ணாடிப்பட்டு தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டு, அதற்கு பதிலாக கதிர்காமம் தொகுதி திமுகவிற்கு வழங்கப்பட்டது. கூட்டணியின் வெற்றிக்காக திமுக தொடர்ந்து விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்பட்டது. அதே போன்று இந்தியா கூட்டணியில் இடம் பெற்றிருந்த, கூட்டணிக் கட்சிகளான விடுதலை சிறுத்தைகள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் அவர்கள் கேட்ட தொகுதிகளை ஒதுக்கவில்லை. அவர்கள் போட்டியிட்ட தொகுதிகளிலும் காங்கிரஸ் சார்பில் நட்பு சண்டை என்று சொல்லக்கூடிய போட்டிவேட்பாளரை நிறுத்தினர். இதனால் இந்த கட்சிகள் நமக்கு தேர்தல் பணியாற்றிவில்லை என்பது கண்கூடு.

இதற்கிடையில், திமுக வேட்பாளர்கள் வெற்றி பெறக்கூடிய இடங்களில் “ப்ரண்ட்லி ஃபைட்” என்ற பெயரில் ஆறு தொகுதிகளில் காங்கிரஸ் சார்பில் மாற்று வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். கூட்டணி ஒற்றுமையை பாதிக்கும் வகையிலான இந்த அணுகுமுறையையும் திமுக பொறுமையுடன் எதிர்கொண்டது. இருந்தபோதிலும், “ப்ரண்ட்லி ஃபைட்” ஆடிய ஆறு தொகுதிகளில் மூன்று தொகுதிகளில் திமுக வெற்றி பெற்றது. மொத்தத்தில் திமுக போட்டியிட்ட தொகுதிகளில் ஐந்து தொகுதிகளில் வெற்றி பெற்று தனது அரசியல் வலிமையை நிரூபித்தது.

இன்று வைத்திலிங்கம் அவர்கள் கூட்டணிக்கு திமுக தான் தலைமை தாங்கியது, திமுக எதிரியை சரியாக மதிப்பிடவில்லை என்று கூறுவது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. தேர்தல் காலம் முழுவதும் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை காங்கிரசே ஏற்றதாக தொடர்ந்து வலியுறுத்தி, தேர்தல் வாக்குறுதி அளித்தவர்கள் இன்றோ அதற்கு மாறாக பேசுவது அரசியல் வசதி வாதத்தை மட்டுமே காட்டுகிறது.

கூட்டணியில் அதிக தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்திய காங்கிரஸ், 23 தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனால் தேர்தல் முடிவுகள் வெளியாகியபோது, 13 தொகுதிகளில் டெபாசிட் இழக்கும் அளவிற்கு மக்கள் ஆதரவை பெறத் தவறியது. இதன் உச்சகட்டமாக, தன்னை முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்திக் கொண்டு தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் அவர்களே டெபாசிட் இழந்தார்.

மேலும், நீண்ட காலமாக தன்னுடைய அரசியல் செல்வாக்கு கொண்டதாக கருதப்படும் காமராஜ் நகர் தொகுதியில் போட்டியிடாமல், அந்தத் தொகுதியை எதிர் கட்சியான லட்சிய ஜனநாயக கட்சிக்கு விட்டுக்கொடுத்து தட்டாஞ்சாவடியில் போட்டியிட்டது ஏன்? என்ற கேள்வி அப்போது காங்கிரஸ் கட்சியினரிடமே எழுந்தது. தேர்தல் தோல்விக்குப் பிறகும், காங்கிரஸ் கட்சியின் படுதோல்விக்கு மாநில தலைவர் வைத்திலிங்கத்தின் தவறான அணுகுமுறையே காரணம் என்று கூறி, அவரது இல்லத்தை முற்றுகையிட்டு பல்வேறு கட்டப் போராட்டங்களில் அக்கட்சியினரே ஈடுபட்டனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

கூட்டணிக்கு தலைமை தாங்கியது யார்? அதிக தொகுதிகளில் போட்டியிட்டது யார்? தேர்தல் வியூ கங்களை வடிவமைத்தது யார்? என்பதற்கு புதுச்சேரி மக்களுக்கே பதில் தெரியும். அத்தகைய சூழலில், தேர்தல் தோல்விக்கான முழுப் பொறுப்பையும் திமுக மீது சுமத்தும் முயற்சி உண்மையை மறைக்கும் அரசியல் நாடகம்.

திமுக எப்போதும் கூட்டணி தர்மத்தையும், அரசியல் நாகரிகத்தையும் கடைபிடித்து வந்துள்ளது. தேர்தல் தோல்வி ஏற்பட்டால் அதன் காரணங்களை நேர்மையாக ஆராய்வதே ஜனநாயக அரசியலின் அடிப்படை. அதற்கு மாறாக கூட்டணிக் கட்சிகளை குறிவைத்து குற்றம்சாட்டுவது தோல்விக்கான காரணங்களை மறைக்கும் முயற்சியாகவே பார்க்கப்படும்.

எனவே, புதுச்சேரி அரசியலில் முதிர்ந்த அனுபவம் பெற்றுள்ள வைத்தி லிங்கம் அவர்கள் உண்மைகளைத் திரித்து பேசுவதை நிறுத்தி விட்டு, புதுச்சேரி மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி ஏன் மக்களின் நம்பிக்கையை இழந்தது என்பதை முதலில் சுயபரிசோதனை செய்ய வேண்டும். திமுக மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டு களை முன் வைப்பதன் மூலம் வரலாற்று உண்மைகளை மாற்ற முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்

# மேலகரம் பேரூர் பகுதி 2 இடங்களில் தலா ரூபாய் 4.30 லட்சத்தில் உயர் கோபுர மின்விளக்கு!

## ஜீவானந்தம் தலைமை! வே.ஜெயபாலன் - மரு.ராணி ஸ்ரீ குமார் எம்.பி. - கலை கதிரவன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

தென்காசி, ஜுன் 18-

தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேலகரம் பேரூராட்சி பகுதியான தெப்பக்குளம் மற்றும் எழில்நகர் ஆகிய 2 இடங்களில் தலா 4.30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உயர் மின் கோபுர விளக்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்றனர்.

தென்காசி மாவட்டம் மேலகரம் பேரூர் பகுதிகளான தெப்பக்குளம், எழில் நகர் ஆகிய 2 இடங்களில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்டிருந்த உயர் கோபுர மின் விளக்கு துவக்க விழா நிகழ்வு மேலகரம் பேரூர் துணைச் செயலாளரும்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவருமான ஜீவானந்தம் தலைமையில் பேரூராட்சி மன்ற தலைவர் வேணிவீரபாண்டியன், கவுன்சிலர்கள் கபிலன், மகேஸ்வரன், செயல் அலுவலர் அமானுல்லா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்று உயர் மின் கோபுர விளக்கை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தனர். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், கவுன்சில ர்கள் பூமா, சம்முகுட்டி,தங்கம்மாள்,சிங்கதுரை, முன்னாள் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் வேலு ச்சாமி,

வர்த்தக அணி முத்துக்குமார், மாணவரணி மஹ்முதா,கதிர், சலீம், ரமேஷ், நன்னை பாலு, யாகவா சுந்தர், வீரபாண்டி, கல்யாணசுந்தரம், கணேசன்,முருகன்,வீரபாண்டியன், அருண்,பகவதி ராஜ், கபீர் ஷெரீப், மனோகரன்,பொரோஸ்கான், ஆயிரப்பேரி முத்துவேல்,ஜிம் ஜெய்சங்கர்,சந்திரன், சுப்பிரமணியன், பிரவீன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### கோவையில் இரும்புக் கம்பியால் தாக்கி

# கல்லூரி மாணவரிடம் 2 பவுன் நகை பறிப்பு!

கோவை, ஜுன் 18-

கோவையில் இரும்பு கம்பியால் தாக்கி, கல்லூரி மாணவரிடம் 2 பவுன் நகை பறித்து விட்டு, அவரை அறையில் அடைத்து வைத்து ரூ.2 லட்சம் கேட்டு மிரட்டிய கும்பலை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டம் வெம்பகோட்டையை சேர்ந்தவர் ராஜ மாணிக்கம் மகன் கேசவன் (19). இவர், கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் பி.காம் 3ம் ஆண்டு படித்து வருகிறார். குனியமுத்தூர் இபி காலனியில் நண்பர் தரணீஸ் என்பவருடன் சேர்ந்து அறை எடுத்து தங்கி கல்லூரி சென்று வருகிறார். நேற்று முன்தினம் கேசவன் வெளியே சென்றுவிட்டு தனது அறைக்கு திரும்பிய போது அவரது அறையில் மேலும் 5 பேர் இருந்தனர்.

அவர்கள் கேசவனிடம் தகராறு செய்தனர். பின்னர், அவரை இரும்பு கம்பியால் தாக்கி அவர் அணிந்திருந்த 2 பவுன் தங்க செயினை பறித்தனர். மேலும், கேசவனை அறையில் அடைத்து வைத்ததுடன் ரூ. 2 லட்சம் கொடு த்தால் தான் வெளியே விடுவோம் என மிரட்டினர். இதனை அறிந்து பக்கத்து அறையை சேர்ந்த சிலர் காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தனர். அதன்பேரில், குனிய முத்தூர் காவல்துறையினர் அங்கு வந்தனர். அவர்கள் வருவதை அறிந்ததும், அந்த கும்பல் முதல் மாடியில் இருந்து கீழே குதித்து அங்கிருந்த பைக்குகளில் தப்பி சென்றனர்.

இதுகுறித்து கேசவன் அளித்த புகாரின் பேரில், குனியமுத்தூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். அதில் கேசவனிடம் நகை பறித்து அறையில் அடைத்து வைத்து பணம் கேட்டு மிரட்டியது ஆகாஷ், பாண்டி உள்பட 5 பேர் கும்பல் என்பது தெரியவந்தது. காவல்துறையினர் அவர்களை தேடி வருகின்றனர்.